# சுனாமிக்குப் பின்னர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றல் கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலையான முகாமைத்துவ செயற்திட்டம்

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 முடிவடைந்த 4 மாத காலத்திற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 4 மாத காலத்திற்காக விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அக்கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

## 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்காக கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2010 செப்டெம்பர் 10 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 3,402,250 ஆக இருந்தது. மீளாய்வு காலத்திறற்கான செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | ஆக்கக்கூறுகள் | 2010 செப்டெம்பர் 10 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம் |
|---|---|---|
| | | ரூபா |
| (அ) | மோட்டார் வாகங்களும் உபகரணங்களும் | 689,620 |
| (ஆ) | செயற்பாடுகளும் பராமரிப்பும் | 2,712,630 |
| | மொத்தம் | 3,402,250 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, 2010 செப்டெம்பர் 10 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அக் கணக்கில் இருக்கும் மீதி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| விபரங்கள் | யூஎஸ் டொலர் | ரூபா |
|---|---|---|
| ஆரம்ப வைப்பு | 500,000 | 56,740,150 |
| கழி: | | |
| பற்றுதல்கள் | 66,758 | 7,502,198 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 1,168,471 |

| | | |
|---|---|---|
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 433,242 | 48,069,481 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 பெப்ரவரி 19 இல் வெளியிடப்பட்ட புதினப் பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு வேண்டப்பட்ட தகைமை மற்றும் அனுபவம் இல்லாத ஐந்து உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

தலைப்பு 139 - கிழக்கு மாகாண இன் கீழ் 2010 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீடுகளில் ரூபா 70,300,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கு உட்பட்ட காலத்திற்கான நிதியேற்பாடுகள் மற்றும் ஏற்பட்ட செலவினம் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கூறுகள் | செலவினத் தலைப்பு | வெளிநாட்டு உதவிகள் மற்றும் இலங்கை அரசாங்க பங்களிப்பு | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | 2010 செப்டெம்பர் 10 முதல் திசெம்பர் 31 வரையான காலத்திற்கான செலவினம் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | % |
| மூலதனச் செலவினம் | 139 | எவ்ஏ | 65,300,000 | 3,400,618 | 5.2 |
| நிர்வாகக் கிரயமும் வரியும் | 139 | இலங்கை அரசாங்கம் | 50,000,000 | 1,632 | 0.03 |
| | | | 70,300,000 | 3,402,250 | 4.84 |

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடமைகளைப் பாகுபடுத்தல்

(ஆ) முற்பணத் தீர்ப்பனவுகள்

(இ) கணக்கீட்டுப் பதிவேடுகளின் பேணுகை